# ஜல்லிக்கட்டு பாடல்

+ 91 9942684099
நா. ரவி ரங்கசுவாமி

பல்லவி

- ஜல்லிக்கட்டு ஜல்லிக்கட்டு
  நடக்குதுபார் ஜல்லிக்கட்டு
- துள்ளிக்கிட்டு துள்ளிக்கிட்டு
  ஓடிவா துள்ளிக்கிட்டு
- புல்லுக்கட்டு புல்லுக்கட்டு
  கொண்டுவா புல்லுக்கட்டு
- மல்லுக்கட்டு மல்லுக்கட்டு
  காளையோடு மல்லுக்கட்டு

மாவீரர் கூட்டமே வா வா வா
மறத்தமிழினமே வா வா வா
மறவர் கூட்டமே வா வா வா
உழவர் கூட்டமே வா வா வா

சரணம் 1

- தவறாமல் நடத்துவோம் ஜல்லிக்கட்டு
  ஜல்லிக்கட்டு விதிமுறை தெரிந்து
  தவிர்க்காமல் நடத்துவோம்
- வீரர்களுக்கு பரிசுகள் கொடுத்திடுவோம்
  அனைத்து காளைகளுக்கும்
  பரிசுகள் கொடுத்திடுவோம்

வீர வேடிக்கை பாக்க வாங்க தமிழச்சிகளே
மாட்டு வேடிக்கை பாக்க வாங்க தமிழச்சிகளே
பொம்பளகாள ஓட்டிவாங்க தமிழச்சிகளே
வீரம் ஊட்டி வளர்த்த வீரத் தமிழச்சிகளே

- எக்காளமிட்டே வருது வருது
  வீரத்தமிழ்நாட்டு எருது எருது
- பிடி படாக் காளை வருது வருது
  பிடிக்கும் வீரனுக்கு விருது விருது - ஜல்லிக்கட்டு

 + 91 9942684099

சரணம் 2 நா. ரவி ரங்கசுவாமி

- வீடு தவறாம காளை மாடு வளர்த்திடுவோம்
  வீரியமிக்க காளைக் கன்றுகளை
  உருவாக்கிடுவோம்
- மாடென்றால் செல்வமென்று தமிழ் சொல்லுதே
  பசுவையும் காளைகளையும்
  வளர்த்திடுவோம்

மெரினாவில் போராட்டந்தான் நடத்தினோமே
ஜல்லிக்கட்டு உரிமையை மீட்டெடுத்தோமே
மெரினா புரட்சி வீரர்களுக்கு வணக்கம் சொல்லுவோமே
உலகம் முழுவதும் ஜல்லிக்கட்டை நடத்திடுவோமே

தார தப்பட்ட முழங்குது முழங்குது
கரவொலி விசில் ஒலிக்குது ஒலிக்குது
வாடி வாசலே குலுங்குது குலுங்குது
காள வந்து நின்னு மிரட்டுது மிரட்டுது

---

ஜல்லிக்கட்டு ..

இளைஞர் கூட்டமே வா வா வா
விவசாயி கூட்டமே வா வா வா
வாடி வாசல் தேடியே வா வா வா
காளை ஓட்டிக்கிட்டே வா வா வா

---

- ஜல்லிக்கட்டு ஜல்லிக்கட்டு
  நடக்குதுபார் ஜல்லிக்கட்டு
- துள்ளிக்கிட்டு துள்ளிக்கிட்டு
  ஓடீவா துள்ளிக்கிட்டு

---